# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**
**நீதித்துறை நடுவர்**
**அம்பத்தூர்**
**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 06 ஆம் நாள் சனிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 561/2024**

**TNTR29-008647-2024**

| | | |
|---|---|---|
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும்<br><br>குற்ற எண். | :<br><br>: | அரசு தரப்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>டி-1 அம்பத்தூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 957/2024 |
| எதிரியின் பெயர், வயது மற்றும் முகவரி | : | பிரகாஷ், வயது - 22/2024,<br>த/பெ.நேரு,<br>எண்.28, ஏட்டேஸ்வரன் கோவில் தெரு,<br>விவேகானந்தா பள்ளி எதிரில், அயனம்பாக்கம்,<br>ராயல் கிளப் பின்புறம், சென்னை. |
| எதிரியின் ஜாதி அல்லது இனம் | : | இந்து |
| எதிரியின் தொழில் | : | கூலி |
| குற்ற நிகழ்வு நாள் | : | 11.09.2024 |
| புகார் தேதி | : | 12.09.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 12.09.2024 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 11.11.2024 |
| விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | : | 04.06.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 05.06.2026 |

| | | |
|---|---|---|
| தண்டனை மற்றும் உத்தரவு | : | எதிரி மீது நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 303 (2) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு **<u>61 நாட்கள்</u>** மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து சட்டப்பிரிவு 271 (2) BNSS இன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் இல்லை. |
| காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுதரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதில் காலதாமதம் |

இந்த வழக்கு 06.11.2024 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை 1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் திருமதி.R.மஞ்சுளா என்பவர் முன்னிலையாகியும் இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

<u>தீர்ப்புரை</u>

டி-1 அம்பத்தூர் காவல் நிலையம், குற்ற எண். 957/2024 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 193(2) BNSS இன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

### 1) குற்ற இறுதி அறிக்கை :-

சாட்சி-1 திரு.சண்முகராஜா என்பவர் கடந்த 11.09.2024 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு TN-20-BL-0424 EICHER என்ற வண்டியை நிறுத்தி வைக்கப்பட்டு வீட்டிற்கு சென்ற நிலையில் நள்ளிரவில் எதிரி பிரகாஷ் என்பவர் தனது சுயலாபத்திற்காக திருடவேண்டும்

என்ற கெட்ட நோக்கத்துடன் சாட்சி-1 க்கு சொந்தமான ஈச்சர் வண்டியில் உள்ள டீசலை திருடிச் சென்று குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது சட்டப்பிரிவு 303(2) BNS இன் கீழ் டி-1 அம்பத்தூர் காவல் உதவி ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் 21.10.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 06.11.2024 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரி பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு 230 BNSS பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 04.06.2026 ஆம் தேதியன்று எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்தும், அது குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்ட போது எதிரி குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

5. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் காட்டப்பட்டு அதில் அ.சா.1 மட்டும் விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ. 1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுதரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின் வருமாறு</u> :-**

கடந்த 12.09.2024 ஆம் தேதி உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி சண்முகராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.த.சா.ஆ.1** ஆன புகாரினைப் பெற்று குற்ற எண்.957/2024, சட்டப்பிரிவுகள் 303(2) பி.என்.எஸ் இன் கீழ் **அ.த.சா.ஆ.2** ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். அதன் பின்பு சாட்சிகள் இளம்பருதி, கருப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.3** ஆன பார்வை மகஜரும், **அ.த.சா.ஆ.4** ஆன மாதிரி வரைபடமும் தயார் செய்து மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவரவே எதிரியை தேடிவந்த நிலையில் எதிரியை அன்றைய தினமே கைது செய்த போது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பன்னீர் செல்வம் மற்றும் அஜித் குமார் ஆகியோர் முன்னிலையில் பெற்று, மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரியை அன்றைய தினமே தகுந்த நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்து, மேலும் சாட்சி லட்சுமியை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, அதன்பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை 21.10.2024 அன்று தாக்கல் செய்துள்ளார்.

8. புகார் **அ.த.சா.ஆ.1**, முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.2**, பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.3** மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4**, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5** ஆகும். இதுவே அரசுதரப்பு சாட்சியத்தின் சுருக்கம் ஆகும்.

9. இவ்வழக்கில் கடந்த 05.06.2026 ஆம் தேதியில் அரசுதரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 351(1) (b) BNSS இன் கீழ் வினவிய போது, எதிரி அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார். தனது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை என கூறினார். எனவே எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

## 10. <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை :-</u>

இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

## 11. <u>தீர்வு</u>

(i) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுதரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

(ii) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி 1 திரு.சண்முகராஜா மற்றும் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 6 வரையிலானவர்கள் விசாரணை செய்யப்படவில்லை எனவும், புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் மட்டும் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கு போதுமானதாக அமையவில்லை எனவும், இவ்வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை எனவும், அரசுதரப்பு தமது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

(iii) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான பட்டியல் சாட்சி-1 திரு.சண்முகராஜா மற்றும் ஏனைய பட்டியல் சாட்சிகளான 2 முதல் 6 வரையிலானவர்கள் தற்பொழுது எங்கிருக்கிறார்கள்? என்பது கண்டறிய முடியாததால் மேற்கண்ட சாட்சிகளை விசாரணை

செய்வதிலிருந்து அரசுதரப்பு விலக்கி கொண்டு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான காவல் உதவி ஆய்வாளர் திரு.தாமோதரன் என்பவருக்கு பதிலாக அ.சா.1 ஆக காவல் உதவி ஆய்வாளர் திரு.சீனிவாசலு என்பவர் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

(iv) மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து கடந்த 11.09.2024 அன்று இரவு 08.00 மணிக்கு இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான திரு.சண்முகராஜா என்பவர் தனது TN-20-BL-0424 EICHER என்ற வண்டியை நிறுத்தி வைத்து விட்டு வீட்டிற்கு சென்ற நிலையில் எதிரி பிரகாஷ் என்பவர் தனது சுய ஆதாயத்திற்காக திருடவேண்டும் என்ற நோக்கத்துடன் நிகழ்நிலை புகார்தாரரான சாட்சி-1 திரு.சண்முகராஜா என்பவருக்கு சொந்தமான EICHER என்ற வண்டியிலிருந்து டீசலைத் திருடிச் சென்றுள்ளார் என்பது உறுதியாகிறது.

(v) எதிரி தரப்பில் இவ்வழக்கில் தனிப்பட்ட கண்ணுற்ற சாட்சிகளோ, நிகழ்நிலை புகார்தாரரான திரு.சண்முகராஜா என்பவரை விசாரணை செய்யப்படவில்லை என வாதம் முன் வைக்கப்பட்டாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிக்கு பதிலாக அ.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளரின் நம்பத்தகுந்த சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரி நிகழ்நிலை புகார்தாரர் திரு.சண்முகராஜா என்பவருடைய TN-20-BL-0424 EICHER என்ற வண்டியிலிருந்து சட்டவிரோதமாக ஆதாயம் அடையவேண்டும் என்பதற்காக அவரது வண்டியிலிருந்து டீசலை திருடிச்சென்றுள்ளார் என்பது அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

(vi) எனவே எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட சட்டப்பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(vii) இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவு 303 (2) BNS இன் படியான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி போதிய சாட்சிய, சான்றாவணங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் மேற்கண்ட எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 303 (2)

BNS இன் படி குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்து எதிரியிடம் அவருக்கு அளிக்கப்போகும் தண்டனை குறித்து வினவிய போது "தான் ஏழை என்றும், தன்னை நம்பி தனது குடும்பம் உள்ளதாகவும், தனது குடும்பத்தில் தான் ஒருவர் மட்டுமே வருமானம் ஈட்டும் நபர் என்றும், தனக்கு முன் வழக்குகள் எதிலும் தண்டனை தீர்ப்பு வழங்கப்படவில்லை எனவும், எனவே கருணை கூர்ந்து குறைந்தபட்ச தண்டனை வழங்குமாறு" கேட்டுக் கொண்டார்.

(viii) இவ்வழக்கின் சங்கதிகள், சூழ்நிலைகள் மற்றும் குற்றத்தின் தன்மை, பாதிக்கப்பட்ட நபரின் வயது ஆகியவற்றை பரிசீலனை செய்யும் பொழுது இவ்வழக்கின் எதிரிக்கு சட்டப்பிரிவு 401 BNSS இன் பலன்களையோ, குற்றவாளிகள் நன்னடத்தை கண்காணிப்பு சட்டம் 1958 இன் கீழான பலன்களையோ வழங்குவது உகந்ததாக இருக்காது என நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(ix) இவ்வழக்கில் எதிரியின் வயது, குடும்ப சூழ்நிலை அவர்களின் வாழ்வியல் அமைப்பு, மற்றும் அவரின் குடும்பத்தின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு இவ்வழக்கை பொறுத்து எதிரிக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

12. <u>**முடிவாக**</u>

எதிரி மீது நிரூபணம் செய்யப்பட்ட சட்டப்பிரிவு 303 (2) BNS இன் படியான குற்றச்சாட்டிற்கு <u>**61 நாட்கள்**</u> மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து சட்டப்பிரிவு 271 (2) BNSS இன் படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 - ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

JAISANKAR Digitally signed by JAISANKAR

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | : | திரு.சீனிவாசலு (காவல் உதவி ஆய்வாளர்) | புலன்விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.ஆ.1** | : | புகார் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.2,** | : | முதல் தகவல் அறிக்கை | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.3** | : | பார்வை மகஜர் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.4,** | : | மாதிரி வரைபடம் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.5,** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.1 |

அரசுதரப்பு சான்று பொருள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :- இல்லை

## Case Summary : -

1) எதிரிகள் சிறையில் இருந்த நாட்கள் -- 61 days

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 21.10.2024

3) எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 04.06.2026

4) எதிரி மீதான குற்றச்சாட்டை விளக்கிக் கேட்ட நாள் -- 04.06.2026

5) இடைக்கால மனு விபரம் -- -------

6) சாட்சிகளின் விசாரணை நாள்

அ.சா.1 -- முதல் விசாரணை -- 05.06.2026

குறுக்கு விசாரணை -- 05.06.2026

7) எதிரிகள் கு.வி.மு.ச. பிரிவு 351(1) (b) BNSS ன்

| | | |
|---|---|---|
| கீழ் விசாரிக்கப்பட்ட நாள் | -- | 05.06.2026 |
| 8) எதிரிகள் தலைமறைவாக இருந்த விபரம் | -- | ----- |
| 9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் | -- | இல்லை |

JAISANKAR Digitally signed by JAISANKAR

குறிப்பு :-

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இல்லை.

2) காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு தெரிவிக்கப்பட்டது.